திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த முத்திரைத் தாள் விவகாரத்தைப் பற்றித் துணைச் சபாநாயகர் ரொம்ப நன்றாக அருமையாகச் சொன்னார். காரணம் என்ன என்பதைப் பற்றி, ரொம்ப வர வேற்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கேள்வியைக் கேளுங்கள். அவர் நன்றாகச் சொன்னார் என்று பாராட்டும் விழா அப்புறம் நடத்துவோம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: பாராட்ட வேண்டியதைப் பாராட்ட வேண்டியதுதானே. ஆகையினாலே, வாங்கு கிறவன் இருந்தால் தானே விற்பவன் இருக்க. எப்படி இருக்கிறது என்றால், ஏதோ வசனம் சொல்வார்கள், அதாவது, என் வீட்டுப் பெண் பொல்லாதது, உன் வீட்டுப் பிள்ளையை அடக்கிக் கொள் என்று. அதுமாதிரி, வாங்குகிறவன் இருந்தால்தானே ஐயா விற்கிறவன் விற்கிறான். இலஞ்சம் கொடுக்கின்றவன் இருப் பதால்தானே வாங்குகிறவன் வாங்குகிறான்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா நேரத்தில் ''தத்துவங்கள்'' அனுமதிக்கப்பட மாட்டா.

9–35 மணி

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர்களே, வாங்குபவர்கள் யார் என்று கண்டுபிடித்து அவர்களுக்குத் தண் டனை அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, தீட்சிதர் அவர்கள் தத்துவம் பேசுகிறார் என்று சொன்ன காரணத்தால் சொல்கிறேன். குழப்ப நிலையில் இருந்து தான் தத்துவங்கள் பிறக்கும். (சிரிப்பு).

பட்டா வழங்குதல்.

*6305—திரு. பி. மாரப்பன் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா :

காங்கேயம் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், முகாசிப்பிடாரியூர் பஞ்சாயத்து பனங்காட்டில் சுமார் 40 ஆண்டு களாகக் குடியிருப்போருக்கு, குடியிருக்கும் இடத்தை பட்டா கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர் களே,

1990 ஏப்ரல் 6]

பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், முகாசிப் பிடாரியூர் கிராமத்தில் புல எண் 710-2இல் உள்ள தோப்பு புறம்போக்கு நிலத்தை அதில் குடியிருக்கும் 47 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டு செயற்குறிப்புகள் மாவட்ட வருவாய் அலுவலரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, பனை மரங்கள் இருக்கிற காடுகளில் பனைமரம் ஏறுவதற்கு ஒருவருக்கு 2-சி பட்டா கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த நிலம் வேறு ஒருவருக்கு இருக்கிறது, அல்லது அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. எனவே, பனை மரம் இருக்கிற இடங்களில் பட்டா வாங்கியவர்களுக்குச் சிக்கல் ஏற்படுகிறது. இது தமிழகம் முழுவதும் இருக்கிற நிலைமை. எனவே, யாருக்கு 2-சி பட்டா பனைமரம் ஏறுவதற்கு உரிமம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கே அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க அரசு நடவடிக்கையெடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு யோசிக்கும்.

திரு. வி. தம்புசாமி : தலைவர் அவர்களே, நீண்டகாலமாக புறம் போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு இன்னமும் பட்டா கிடைக்கவில்லை. அதனால் வீடு கட்ட அரசு கடனோ.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது காங்கேயம் தொகுதி பனங்காட்டைப் பற்றியது. அடுத்து திரு. சி. கோவிந்தசாமி திருப்பூரில் ஏதாவது பனங்காடு இருக்கிறதா ? (சிரிப்பு).

திரு. சி. கோவிந்தசாமி : தலைவர் அவர்களே, அந்த பனங் காட்டைப் பற்றியே கேட்கிறேன். சுமார் 40 ஆண்டுக் காலமாக அங்கேகுடியிருந்து வருவதாகக்கேள்வியில் எழுப்பப்பட்டிருக்கிறது. பட்டா வழங்குவதில் தோப்பு புறம்போக்கு என்பதால் நத்தமாக மாற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதா ? அப்படி யென்றால், எவ்வளவு ஆண்டுகள் என்று எல்லை இல்லாமல் 40 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்று நீடிக்கிறதே, இதை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவதற்குக் காலவரையறை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, நிச்சயமாக அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.